செ. கு. எண்: 119 நாள் : 31.10.2015

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 31.10.2015

18.6.2015 அன்று அரியலூர் மாவட்டம், செந்துறை கிராமத்தைச் சேர்ந்த திரு. குணசேகரன் என்பவரின் மகள் சுகுணா சாலையோர மின்கம்பத்தினை தொட்ட போது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

19.6.2015 அன்று புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், மாங்காடு பட்டிபுஞ்சை கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பா மற்றும் அவருடைய மனைவி திருமதி அன்னபூர்ணம்;

21.6.2015 அன்று தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டம், திருவிசநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனி என்பவரின் மகன் சின்னதம்பி;

25.6.2015 அன்று விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், தைலாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. கோவிந்தராஜ் என்பவரின் மகன் சக்கரபாணி;

-- ஆகியோர் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

21.6.2015 அன்று கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், கோவளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஞானசேகர் என்பவரின் மகன் அஸ்வின் சாலையில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி, மயக்கமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

23.6.2015 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், செங்குளம் கிராமம், முடுக்குப்பட்டி பகுதியைச் சேர்ந்த திருமதி மலர்கொடி என்பவர் குடிநீர் தொட்டியில் தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த போது, அருகிலுள்ள மின்கம்பத்திலிருந்து மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

27.6.2015 அன்று தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், சின்னமனூர் நகராட்சியைச் சேர்ந்த திரு. சின்னாண்டி என்பவரின் மனைவி திருமதி சுருளியம்மாள், வீட்டினருகே தண்ணீர் பிடித்துக் கொண்டிருந்த போது மின்கம்பி அறுந்து விழுந்து மின்சாரம்

தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**